# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 28–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

## இ.ம.எண்.9/2025 இன் அ.வ.எண்.20/2009

## CNR No. TNSA13-000042-2009

1. பழனியப்பன்
2. கந்தன்
3. சிவசங்கர் . . . மனுதாரர்கள் /வாதிகள்

/எதிராக/

1. பச்சமுத்து
2. வடிவேல் பிள்ளை (இறந்தவர்)
3. சரவணன்
4. ஆறுமுக கோனார் (இறந்தவர்)
5. ராஜ்குமார்
6. ராஜ்மோகன் . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 19.11.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.தயாளன் அவர்கள் ஆஜராகியும், 1, 5, 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவுடன் தாக்கல் செய்யும் Reply statement–ஐ ஏற்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

II. **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>**

மனுதாரர் மேற்படி வழக்கில் 1ம் வாதி என்றும், இம்மனுவை தனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கானது எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவாவில் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையில் பல தவறான சங்கதிகளை கூறி தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி தவறான சங்கதிகளை மறுத்து மனுதாரர்கள் தரப்பில் Reply statement–ஐ தாக்கல் செய்ய வேண்டியது அவசியம் என்றும், எனவே மனுவுடன் தாக்கல் செய்யும் Reply statement–ஐ ஏற்றுக் கொள்வதால் வழக்கின் தன்மை மற்றும் வழக்கு மூலம் மாறாது எனவும், எனவே இம்மனுவை அனுமதித்து உத்திரவு பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

III. **<u>6ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்து 1, 5 ம் எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

எதிர்மனுதாரர் இம்மனுவில் உள்ள சங்கதிகளில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார். மனுதாரர்கள் நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் மட்டும் கோரி தாவா தாக்கல் செய்து விட்டு, தற்போது தாவா பாதையில் Easement படி விளம்புதல் பரிகாரம் கோரி தாவா பிராதை திருத்தம் செய்துள்ளதாகவும், மனுதாரர்களுக்கு Easement படி தாவா பாதையில் உரிமை ஏற்பட்டுள்ளதாகவும், ஆனால் பாதை ஒப்பந்த பத்திரப்படி உரிமை ஏற்பட்டு பதிலுரையில் முன்னுக்கு பின் முரணான விவரங்களை குறிப்பிட்டிருப்பது சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல என்றும், Reply statement –ல் அவசியமில்லாத விவரங்களை குறிப்பிட்டு Reply statement –ஐ ஏற்க வேண்டி

இம்மனு தாக்கல் செய்திருப்பதால் இம்மனு ஏற்கத்தக்கதல்ல என்றும், மேலும் 1, 5, 6 பிரதிவாதிகளுக்கு தெரியாமல் மனுதாரர்கள் மோசடியாகவும், போலியாகவும் சர்வே எண். 127/2B1, சர்வே எண். 127/1B2 என்று தவறாக உட்பிரிவு செய்து அதனடிப்படையில் 07.01.2009 ல் தட பாத்திய கிரையம் என்ற பெயரில் உரிமையில்லாத நபர்களிடம் ஒரு மோசடியான ஆவணத்தை பதிவு செய்து கொண்டு முன்னுக்கு பின் முரணான விவரங்களுடன் தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

**IV. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்கள் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.**

V. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

வாதிகள், பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர். வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள் /வாதிகள் தங்களது Reply statement–ஐ ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கின் தன்மையையும், மனுவில் கூறப்பட்ட சங்கதிகளையும் கருத்தில் கொண்டு மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள கூடுதல் வழக்குரையை ஏற்க அனுமதித்தால் தான் வழக்கில் சரியான முடிவு காண இயலும் என்பதாலும், வழக்கானது 2009 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு சாட்சி விசாரணை நிறைவடையாத நிலையில் உள்ளதாலும், மேற்கொண்டு காலதாமதத்தை தவிர்க்க வேண்டியும் இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இதனால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

VI. **<u>தீர்வு :</u>**

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, நவம்பர், 28–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.11.28 18:52:09 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :

இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.11.28 18:52:24 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ., ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண்: 9/2025
அ.வ.எண்.20/2009
நாள் : 28.11.2025